
AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
PREPARE TO MEET GOD
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
" நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன் "
சகரியா 10:12
செய்தி மலர்
2024
ஆகஸ்ட்
இதழ் : 16
மலர் : 20



# சபை ஊழியரின் அன்பு மடல்



## உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, கடந்த ஜூலை மாதம் முழுவதும் நம்மை நடத்தின தேவன் வரும் ஆகஸ்ட் மாதத்திலும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவார்.

எபிரேயர் நிரூபத்தை எழுதியவர் கீழ்க்கண்ட காரியத்தை குறிப்பிடுகிறார் "கட்டப்பட்டவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் சரீரத்தோடு இருக்கிறவர்கள் என்று அறிந்து தீங்கு அனுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்" (எபி–13:3) ஆம் பிரியமானவர்களே, நம்மோடு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற சக மனிதர்களுடைய கட்டுகள் பாடுகள் நோய்கள் தீங்குகள் வேதனைகள் எல்லாவற்றையும் நாம் அனுபவிப்பது போல உணர்ந்து இப்படிபட்டவர்களுக்காக ஜெபிப்பதும் உதவி செய்வதும் மிகவும் அவசியமான காரியங்களாகும். எப்போதும் நமக்காக மட்டும் வாழாமல் பிறர் நலனுக்காகவும் நாம் சிந்தை வைத்து மற்றவர்களுக்கு தொண்டு செய்கிறவர்களாக வாழ வேண்டும்.

இயேசு கிறிஸ்துவும் இதைத்தான சொல்லியிருக்கிறார். உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்று (மத்–22:39). இப்படி மற்றவர்களை குறித்த கரிசனையும் பாரமும் ஈடுபாடும் நாம் வைக்கும்பொழுது நமக்கும் மனசமாதானம் கிடைக்கும் மற்றவர்களுக்கும் நன்மையுண்டாகும். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். வேதாகமத்தில் இப்படிப்பட்ட அர்ப்பணிப்பின் வாழ்க்கையை வாழ்ந்தவர்களை குறித்து கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. மோசே ...

விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்று எண்ணப்படுவதை வெறுத்து அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பவதையே தெரிந்துகொண்டு இனிமேல் வரும் பலன் மேல் நோக்கமாயிருந்து எகிப்தியிலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான் (எபி-11:24-30).

ஆம் பிரியமானவர்களே இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டிலே அடிமைகளாக பாடுபட்டபோது அந்த வருத்தத்தை தன்மேல் ஏற்றுக்கொண்டு எகிப்திய இளவரசன் என்ற சுகபோக வாழ்க்கையை துச்சமென மதித்து பிறர் துயர் நீக்க தன்னை அர்ப்பணித்தான். அதனால்தான் கர்த்தர் அவனை பெயர்சொல்லி அழைத்து இஸ்ரவேல் மக்களுடைய விடுதலை பயணத்தைத் துவக்கினார். சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடப்பது போல கடந்து போனார்கள். எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது. ஆம் பிரியமானவர்களே, நாமும் கூட மற்றவர் கஷ்டங்களை புரிந்து கொண்டு அவர்கள் மீது கரிசனைக் கொண்டு அவர்கள் பாடுகளில் பங்கெடுக்கும்பொழுது கர்த்தர் நம் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட இயற்கைக்கு மேற்பட்ட அதிசயங்களை செய்வார். இப்படிப்பட்ட தியாக வாழ்க்கை வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

## 2. பவுல் ...

நான் ஒருவனுக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும் நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு என்னைத்தான் எல்லாருக்கும் அடிமையாக்கினேன் பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு பலவீனருக்கு பலவீனனைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கும் நான் எல்லாருக்கும் எல்லாமானேன். என் சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்துகிறேன் (1-கொரி 9:19-27) பிரியமானவர்களே பவுல் அப்போஸ்தலன் ஒரு பெரிய ஞானி. கமாலியலின் பாதபடியிலே பயின்றவன். பென்யமீன் கோத்திரத்தான்.

எல்லாப் பெருமைகளும் அவனுக்கு இருந்தும் கிறிஸ்து இயேசுவின் தரிசனத்தைக் கண்டவுடன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறியாதவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தன்னை ஒப்புக்கொடுத்தான். கூடாரத் தொழிலையும் செய்துகொண்டு தன்னுடைய தேவைகளை தானே பூர்த்தி செய்துகொண்டு எஞ்சிய நேரத்தை சுவிசேஷம் சொல்ல பயன்படுத்தினான். தன்னை மற்ற ஜனங்களுக்காக அடிமையாய் மாற்றிக்கொண்டான். பலவீனருக்கு பலவீனனாய் மாறி ஆண்டவரின் சுவிசேஷத்தை அறிவித்தான். பேய் பிசாசுகளை துரத்தினான். ராஜாக்களுக்கும் ரோம அதிகாரிகளுக்கும் முன்பாக இயேசுவைக் குறித்து சாட்சி சொன்னான். ஆத்துமா ஆதாயம் செய்வதற்காக தன் சரீரத்தையே ஒடுக்கி கீழ்படுத்தினான். இதன் விளைவாக ஆசியா ஐரோப்பா கண்டத்தை ஆண்டவருக்குள் கொண்டு வந்தான். புதிய ஏற்பாடு முழுவதும் அவன் எழுதின நிருபங்கள் இன்றைக்கும் ஆவிக்குரிய இரகசியங்களை சபைகளுக்கு தெரிவிக்கின்றன. மற்றவர்களுக்காக வாழ வேண்டும் என்ற அர்ப்பணிப்பு எத்தனை ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது பார்த்தீர்களா? அதே போல நம்மையும் நாம் அர்ப்பணிப்போமாக.

## 3. இயேசு ...

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். (2-கொரி-5:21) நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோம-5:8) மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். (கலா-3:13).

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கும் உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. (2-கொரி-8:9)நம்மை ஐசுவரியவான்களாக மாற்ற அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் அடிமையாக தம்மை மாற்றிக்கொண்டார். (பிலி-2:6-8) ஆம் பிரியமானவர்களே இயேசு கிறிஸ்து நம்மை பாவங்களிலிருந்தும் சாபங்களிலிருந்தும் தரித்திரத்திலிருந்தும்

விடுதலை செய்யும்படியாக மனுஷ ரூபமெடுத்து இறங்கி வந்து தன்னுடைய வாழ்க்கையையே நமக்காக ஒப்புக்கொடுத்தாரே. தானியேல் தீர்க்கதரிசி சொன்னான் மேசியா சங்கரிக்கப்படுவார் ஆனாலும் தமக்காக அல்ல மனுமக்களுடைய இரட்சிப்புக்காக என்று (தானி–9:26) இன்றைக்கும் இயேசுவே நமக்கு பரிகாரியாக இருக்கிறார். (யாத்–15:26) பாவங்களோடும் சாபங்களோடும் தரித்திரங்களோடும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஜனங்கள் இயேசுவை விசுவாசிக்கும்பொழுது விடுதலையை பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஆண்டவராகிய இயேசுவுக்கு நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமாக.

**கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் குடும்பத்தினரையும் ஆகஸ்ட் மாதம் முழுவதும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.**

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்....



## தேவ செய்தி

**“கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார்” (சங்கீ–115:12)**

ஆம், அவர் நம்மை விட்டு விலகாத நம்மை கைவிடாத நம் நினைவாக இருக்கும் தேவன் அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச்செய்யும் தேவன். அவர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் நிச்சயமாக நம்மை ஆசீர்வதிப்பார். யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு சிறைச்சாலையில் இருக்கும்போது சொப்பனத்திற்கு அர்த்தத்தை விவரிக்கின்றார். பின்னர் அவனிடம் “நீ வாழ்வடைந்திருக்கும் போது என்னை நினைத்து இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும்” (ஆதி–40:14)என்று கூறுகிறார். ஆனால் பானபாத்திரக்காரரின் தலைவனோ யோசேப்பை மறந்து விட்டான். ஆனால் தேவன் யோசேப்பை மறக்க வில்லை. பானபாத்திரக்காரனின் தலைவன் யோசேப்பை நினைப்பதற்காக தேவன் பார்வோனுக்கு சொப்பனம் தந்தார். ஆச்சரியமானது நம் தேவனுடைய வழிகள்.

மனிதர்கள் நம்மை நினைத்து ஒரு நன்மை நமக்கு செய்தாலும் அது தேவனால் உண்டானதே. நம் வாழ்வின் ஒவ்வொரு ஆசீர்வாதமும் தேவன் நம்மை நினைத்ததால் வந்ததே. தேவன் ஒருவருக்கே மகிமை உண்டாவதாக.

## 1. ராகேலை நினைத்த தேவன்

ஆதியாகமம் 30–ம் அதிகாரத்தில் ராகேல் என்னும் ஒரு பெண்ணிற்கு பிள்ளை இல்லாதிருந்தது. அவள் பிள்ளை இல்லாததினால் தன் வீடு கட்டப்படவில்லை என்று சொல்வதை பார்க்கிறோம் (ஆதி–30:3)
தன் வீடு கட்டப்படவில்லையே என்னும் ராகேலை தேவன் நினைத்தருளினார். "தேவன் ராகேலை நினைத்தருளினார், அவளுக்கு தேவன் செவிகொடுத்து அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்" (ஆதி–30:22)

## 2. நோவாவையும் அவர் குடும்பத்தையும் நினைத்த தேவன்

150 நாள் பிரவாகித்த ஜலத்தால் பூமியின் மேலுள்ள சகல உயிர்களும் மாண்டன. தேவன் நோவாயையும் அவர் குடும்பத்தையும் நினைத்தருளினார். அப்பொழுது ஜலம் அமர்ந்தது. (ஆதி–8:1)
பேழைக்குள் பாதுகாத்த தேவன், நோவாவின் குடும்பத்திற்கு அதினதின் காலத்தில் செய்ய வேண்டிய நன்மைகளை செய்து பேழையிலிருந்து வெளியே வரவும் உதவி செய்தார். நம் குடும்பத்தையும் நினைத்து நம்மை ஆசீர்வதிக்கும் தேவன் அவர்.

## 3. இஸ்ரவேல் ஜனத்தை நினைத்த தேவன்

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரின் கைகளில் அடிமைத்தனத்தினால் தவித்தார்கள். மிகவும் ஒடுக்கப்பட்டார்கள். தேவன் தம் ஜனத்தை நினைத்தார். "தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார், தேவன் அவர்களை நினைத்தருளினார்" (யாத்–2:25).

## நாம் செய்ய வேண்டியது

சங்கீ–115:12–ன் முந்தின வசனத்தில் பார்க்கிறோம். கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள், அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார். கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் ஆசீர்வதிப்பார் (சங்கீ–115:11–13).

நாம் கர்த்தரை நம்ப வேண்டும் அவர் மேல் விசுவாசம் வைக்க வேண்டும். அவர் அனுமதிப்பதெல்லாம் நன்மைக்காக என்று நம்ப வேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி-11:6)

ஆம், கர்த்தரை நாம் நம்புவோம், யோசேப்பை நினைத்து விடுதலையாக்கினவர், ராகேலை நினைத்து பிள்ளைச் செல்வத்தால் ஆசீர்வதித்தவர், நோவாவை நினைத்து அவர் குடும்பத்தை நடத்தினவர், இஸ்ரவேல் ஜனத்தை நினைத்து பாலும் தேனும் ஓடுகிற விசாலமான தேசத்தில் தம் ஜனத்தை கொண்டு போய்ச் சேர்த்தவர், உங்களையும் நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார். ஆமென்

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரி.
**அனிதா திவ்யராஜ்...**



## சகோதரிகள் பகுதி

### அடிகளும் ஆசிகளும்

கிறிஸ்துவுக்குள் பிரியமான உங்கள் அனைவரையும் இந்த செய்தி மலர் மூலமாக சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" (லூக்-1:38).

கன்னி மரியாள் கர்ப்பமாகிவிட்டாள். அவளது காதல் கனவுகள் சிதைந்தன. பரிசுத்த ஆவியினால் கருவுற்றது அல்லது மேசியாவை ஒரு கன்னியாக கர்ப்பத்தில் சுமப்பது அவளுக்கு மகிழ்ச்சியா? ஆம்தான், ஆனால் அதோடு கூட வரக்கூடிய துன்புறுத்தல்களையும் அவள் கணக்கிடாமலில்லை. கன்னிப் பிறப்பு தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் அது நடந்த போது அது விபசாரத்திலிருந்து வேறு பிரித்துப் பார்க்கப்படவில்லை. வெகு சிலரே புரிந்து கொண்டு அவளை ஊக்குவித்தனர். பெரும்பான்மையோர் அவளுக்கு எதிராகவே இருந்திருப்பர். மாலையோ, மத்தாப்போ, கொண்டாட்டமோ கோலாகலமோ மேசியாவின் தாய் மரியாளுக்காக இல்லை. யோசேப்புக்கு இந்த பல்லாண்டு இறைவாக்கு தெரியும், ஆனால் அவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 2000 ஆண்டு பழமையான இறைவாக்கு தன்னில் நிறைவேறினதற்காக மரியாள் தனக்கு அமோக வரவேற்பை எதிர்பார்த்திருக்கலாம், தன்னை எல்லாரும் பாக்கியவதி என்றழைக்க எதிர்பார்த்திருக்கலாம், (லூக்-1:48) ஆனால்

தாழ்மையும், ஏழ்மையுமானவளாகவே வாழ்ந்து இறந்தாள். நற்செய்தி ஆசிரியர்கள் இயேசுவின் பிறப்பைக் குறித்து அறிய ஒரு வேளை அவளை வினவியிருக்கலாம். தனது பெயரை அவர்கள் குறிப்பதைக் கண்டிருக்கலாம். ஆனால் அவள் இறந்த பின்னரே பேறு பெற்றவளானாள். ஆண்டவரது சித்தத்திற்கு அடிபணிந்து அவரது விருப்பத்திற்கு அர்ப்பணிப்பது எளிதல்ல. அது ஏமாற்றமும், ஏக்கமும் சேர்ந்தது, உற்சாகம் மட்டுமல்ல, உடைதலும் சேர்ந்தது, அறுவடை மட்டுமல்ல அல்லலும் சேர்ந்தது, மகிழ்ச்சி மட்டுமல்ல மனமடிவும் சேர்ந்தது.

கடவுளின் கைகளில் நம்மைக் கொடுக்கும் போது எதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும். எதிர்ப் பார்ப்புகளைத் தாண்டி செல்ல தைரியம் கொள்ளுங்கள் ( எபி-10:35) மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். மக்கள் நம்மை அரவணைத்து ஒத்துழைக்க எதிர்பாராதீர்கள், எதிர்ப்பும் கிண்டலும் வரலாம், கடவுளது சித்தம் குறித்து நமக்கு நிச்சயம் உண்டானால் துணிந்து முன் செல்வோம், மனிதர் நம்மை கனப்படுத்தாவிட்டாலும் மகிபன் இயேசு நம்மை கனப்படுத்துவார். இக்கரையில் பிரபலமாகாவிட்டாலும் யோர்தானின் அக்கரையில் அமோக வரவேற்பு இருக்கும்.

இவ்வுலகில் சந்தேகம் நம்மைத் தடுமாறச் செய்தாலும் நம்பிக்கையோடிருப்போம். நம்மை நடத்தும் தலைவரை (இயேசு கிறிஸ்துவை) அறிவோமே அது போதும், மனிதரை பிடிக்கவே இயேசு நம்மை அழைத்திருக்கிறார். மீனவராயிருப்பது தினமும் வாழ்க்கையைப் பணயம் வைப்பது போலத்தான். கொந்தளிக்கும் கடல்களையும், புயல்களையும், சந்திக்கத் தான் வேண்டும். ஒரு போதும் செல்வத்தில் செழிக்க முடியாது. ஆசை காட்டும் அழைப்பல்ல அது (மத்-4:19) " நான் நாள்தோறும் சாவை எதிர்கொள்கிறேன்" என்று சொல்கிறார் பவுல். (1-கொரி15-31) "ஆண்டவரே உம் சித்தம் ஆகட்டும் என்று மரியாளைப் போல் அர்ப்பணிப்போமானால் கர்த்தருக்காக நாம் படும் பாடுகளும் ஆசீர்வாதமாக மாறும்.

நம்மை நாமே ஆண்டவர் பாதத்தில் அர்ப்பணிப்போம்..
ஆசீர்வாதங்களை அவர் கரத்தில் பெறுவோம்..
கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரி.
எப்சிபா ஸ்டீபன்...



# ஜேம்ஸ் சால்மர் (1841–1901)

ஸ்காட்லாண்டு தேசத்தில் ஆகஸ்ட் 4–ஆம் தேதி 1841–ஆம் ஆண்டு ஆர்டிஸ்சா என்ற கிராமத்தில் பிறந்தார் ஜேம்ஸ் சால்மர். அவருடைய தந்தை கல்தச்சர், வேலைக்காக வெளியூர் சென்றவர் வீடு திரும்பவேயில்லை. சிறு வயது முதல் ஜேம்ஸ் சால்மர் ஒழுக்கமுள்ளவராக வளர்ந்தார். இந்த எளிய பக்தியுள்ள, கிறிஸ்தவ பெற்றோருக்கு இன்னும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். தனது வீட்டினருகே இருந்த கடலில் விளையாடுவதும், அங்குள்ள மீனவர்களின் நண்பனாகவும் இருந்தார் ஜேம்ஸ் சால்மர்.

ஓய்வு நாள் பாடசாலையில் ஒருநாள் போதகர் மெக்கின் பிஜி தீவுகளில் பணியாற்றிய ஒரு மிஷனெரியின் கடிதத்தை வாசித்தார் அக்கடிதத்தில் நரமாமிசம் உண்கிற பழங்குடி மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியம், அதன் தேவைகளைப்பற்றி இருந்தது. போதகர் இப்படிப்பட்ட நரமாமிசம் உண்ணும் பழங்குடி மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க இங்கு யார் உண்டு? என அறைகூவலிட்டார். தேவ ஆவியானவர் ஜேம்ஸ் சால்மர் உள்ளத்தில் பேசினபடியால் ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னை அனுப்பும் என தனதுள்ளத்தில் ஜெபித்தார். பின்பு வீடு திரும்பும்போது சாலை அருகே முழங்கால்படியிட்டு ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும் ஒரு மிஷனெரியாக என்னை அனுப்பும் என பிரார்த்தனை செய்தார்.

போதகர் மெக்கின் மற்றும் திரு. டன்கன் போன்ற ஆவிக்குரிய தலைவர்கள் ஜேம்ஸ் சால்மரை உற்சாகப்படுத்தி வழிநடத்தினர். நாட்கள் சென்ற பின்பு, ஜேம்ஸ் சால்மர் ஒரு தேவ ஊழியரானார். பட்டணத்தில் நற்செய்திக் கூடுகைகள், வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்தி வந்தார். அதே வேளையில் தான் ஒரு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் மங்காமல் எரிந்து கொண்டே இருந்தது. 1865–ம் ஆண்டு அக்டோபர் 11–ம் தேதி ஜேன் ஹெர்கல் என்ற பெண்ணை திருமணம் செய்தார். ஜேன் சால்மருக்கு ஏற்றத் துணையாக மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்து, வாஞ்சையுள்ள பெண்ணாக இருந்தார். ஆண்டவரை அறியாத மக்கள் அவரை அறியத் துடிப்பாகக் காத்திருந்த பெண் அவர். திருமணமாகி, இரண்டாம் நாளில் அபிஷேகம் செய்யப்பட்டு, ஜனவரி 4–ஆம் தேதி 1866–ல் "ஜாண் வில்லியம் –II" என்ற கப்பலில் பணிக்களம் செல்லப் புறப்பட்டார்கள்.

...தொடர்ச்சி 14–ம் பக்கத்தில்...

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி -12:2 )

சகோ. ஜோசப் (isco)
சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி. மெர்ஸ்லின் ஏசுரெத்தினம்
சகோதரி. போத்தியம்மாள் கண்ணன்
செல்வன். எரிக் நாதன் ஆன்டனி
செல்வி. வனிஷா
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையன்
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோ. ராஜா குமார்
சகோதரி. ஸ்நேகா லதா கிறிஸ்டோபர்
செல்வி. புஷ்பா ராஜன்

சகோ. சதீஷ்குமார் எத்திராஜ்
சகோதரி. ஜெனிஷா
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
செல்வி. சிஃபன்சிஹா சாம் ஆனந்த்
சகோதரி. சௌமியா ஸ்டாலின்
சுனில் வின்ஸ்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா
சுபின் சிங்
சகோதரி. சங்கீதராஜ்
சகோதரி. டெய்சி ஸ்ரீனா ஆன்டனி
செல்வி. லாரா கேசன்ட்ரா சதிஷ்

பிறந்த நாள் மற்றும் திருமண நாளை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் சபையோராக வாழ்த்துகிறோம்.

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி /திரு. எபிநேசர் – ஸ்நேகா
திருமதி /திரு. டேனியல் ராஜ்
திருமதி / திரு. இம்மானுவேல்–சாந்தி
திருமதி / திரு. ஆமோஸ்–பிரிசில்லா
திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்

திருமதி / திரு. சாலமோன் முருகன்
திருமதி /திரு. கமலதாசன்
திருமதி/திரு. வர்கீஸ்– ஜெஸ்லட்
திருமதி /திரு. ஜான் பாஸ்கோ

# 2024 – ஆகஸ்ட் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/08/2024 | சகோ. சுபின் சிங் | சகோ. ஸ்டாலின் |
| 11/08/2024 | சகோ. பிரசாத் | சகோ. சாம் ஆனந்த் |
| 18/08/2024 | சகோ. M. கிறிஸ்டோபர் | சகோ.சுகுமார் |
| 25/08/2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ. பக்த ராஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/08/2024 | சகோ.வேலு ராமர் | சகோ. ஸ்டாலின் |
| 09/08/2024 | சகோ. ஆரோக்கிய தாஸ் | சகோ. ஜெகநாதன் |
| 16/08/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/08/2024 | சகோ. தாமஸ் | சகோ. பிராங்ளின் |
| 30/08/2024 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**7/8/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பின்னர் அறிவிக்குப்படும்
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**23/8/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – பின்னர் அறிவிக்கப்படும்

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை தேதி பின்னர் அறிவிக்கப்படும்**
இடம் – எப்சிபா ஸ்டீபன் வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – யோவான் நற்செய்தி

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 3:30 முதல் 5:15 ரை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – எப்சிபா ஸ்டீபன் வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 7:00 முதல் 8:30 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – எபினேசர் வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 ஆகஸ்ட் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1. யூதாவின் ராஜா யோயாக்கீனை சிறைச்சாலையிலிருந்து வெளிப்படபண்ணி, செலவுக்காக கொடுத்த பாபிலோன் ராஜா யார்?
2. தன் கண்கள் குருடாக்கப்பட்டு, விலங்குகள் போடப்பட்டு, பாபிலோனில் தன் மரணநாள் மட்டும் காவல் வீட்டில் இருந்த ராஜா யார்?
3. தன் கண்கள் குருடாக்கப்பட்டு, விலங்குகள் போடப்பட்டு, பாபிலோனில் தன் மரணநாள் மட்டும் காவல் வீட்டில் இருந்த ராஜா யார்?
4. எதை கொள்ளையிடுகிறவர்கள் எல்லாரும் பரிபூரணமடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
5. நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப் போன ஜனங்களின் மொத்தத் தொகை எவ்வளவு?
6. கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் எது என்று எரேமியா குறிப்பிடுகிறார்?
7. கர்த்தருடைய வேலையை எப்படி செய்கிறவன் சபிக்கப்பட்டவன்?
8. உன்னையோ நிர்மூலமாக்காமல் மட்டாய் தண்டிப்பேன் என்று யாரைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறார்?
9. கர்த்தர் என் நோவை சஞ்சலத்தால் வர்த்திக்கப் பண்ணினார் என்று யார் சொன்னதாக கர்த்தர் எரேமியாவிடம் கூறுகிறார்?
10. அலைகள் மோதியடிக்கிற நதிகள் போல் எழும்பி வருகிறவன் யார்?
11. நீ உன் சம்பத்தையும் உன் பொக்கிஷங்களையும் நம்புகிறபடியினால் நீயும் பிடிக்கப்படுவாய் என்று யாரைக் குறித்து எரேமியா கூறுகிறார்?
12. ஏழைகளை யூதா தேசத்திலே வைத்து, திராட்சத் தோட்டங்களையும், வயல் நிலங்களையம் கொடுத்தது யார்?
13. பாபிலோன் ராஜாவை சேவியுங்கள். அப்பொழுது நன்மையுண்டாகும்' என்று கூறியது யார்?
14. கர்த்தர் யாருடைய ஆத்துமாவை கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவார்?
15. எங்களை கொலை செய்ய வேண்டாம் என்று இஸ்மவேலிடம் எத்தனை பேர் கெஞ்சினார்கள்?

விடைகளை வருகின்ற 20-08-2024 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு
அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
" எரேமியா "
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7

## 2024 – ஜீலை மாத வேத வினாவுக்கு விடை

1. ஜனங்களைச் சந்தித்து – ரூத் 1:6
2. பட்சமாய் – ரூத் 2:13
3. 30 பொன் தட்டுகள் – எஸ்றா 1:10
4. சன்பல்லாத் – நெகேமியா 4:1
5. சகரியா – எஸ்றா 5 : 1
6. அஸ்னாப்பார – எஸ்றா 4 : 10
7. ராகேல் / லேயாள் – ரூத் 4:11
8. அசெனாவின் குமாரர் –நெகேமியா 3:3
9. கோரேசின் ஆவி – எஸ்றா 1 : 1
10. தீர்க்கதரிசனம் சொல்லிவந்தபடியினால் – எஸ்றா 6:14
11. தேவனுடைய தயவுள்ள கரம் – எஸ்றா 7:9 – நெகேமியா 2:8
12. மாராள் – ரூத் 1:20
13. சிவந்த சமுத்திரத்தில் – நெகேமியா 9:9
14. தீரியா – நெகேமியா 13:16
15. யெசுவா – எஸ்றா 5 : 2

## 2024– ஜீலை மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. தயா ஏசுரத்தினம்
SIS. வனிதா
SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்
SIS. சாந்தி
SIS. மரிய குளோரி தாஸ்

1867இ மே மாதம் 20–ம் தேதி பசிபிக் கடலில் உள்ள அவருவா தீவுக்கு வந்தார்கள். அது ரரோ டோல்கா நகர் அருகே இருந்தது. முதலாவதாக நபராக கரையிறங்கிய அவரை, உன் பெயர் என்ன என்று கேட்ட கேள்விக்கு 'சால்மர்' என்று பதில் கொடுத்தார். அதைக்கேட்ட அந்த பழங்குடி மக்களுக்கு அந்த பெயர் உச்சரிக்க முடியாமல் டமாட்டி என ன று அழைத்தனர். ஒருமுறை கூட கேள்வியுராத மக்களைச் சந்திக்கவே நான் வந்தேன் என்றார். கிறிஸ்துவை சரிவர ஏற்றக்கொள்ளாத அம்மக்கள் குடிப்பழக்கத்தில் நிலைத்திருந்தனர். குடியை நிறுத்துவதே அவருடைய முக்கியப் பணியாகியது.

காட்டுக்குள், அடர்ந்த புதருக்குள் இருந்து குடிக்கும் மக்கள் மத்தியில் திடீரெனச் சென்று மதுவைப் பூமியில் ஊற்றச் செய்துவிட்டு, கிறிஸ்துவைப் பிரசங்கிப்பார். சால்மரின் வாஞ்சை நரமாமிசம் உண்ணும் மக்கள் மீது இருந்தபடியால் குடும்பமாக நியு கினியா செல்ல ஆயத்தமானார். 'கிறிஸ்துவிடம் நெருங்கி வரும்போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களின் பணி வாஞ்சையே என்னை ஆட்கொள்கிறத என்கிறார் சால்மர்.

1877–ம் ஆண்டு மே மாதம் நியூகினியா சென்றார். நாகரீகமற்ற, பாவம் நிறைந்த, மூடத்தனம் மிக்க, கொடூரமாக பழங்குடிகள் வாழுமிடமாயிருந்தது. ஒரு நாள் சால்மர் வீட்டிற்கு ஒரு பெருங்கூட்ட பழங்குடியினர் வந்து, எங்களுக்குக் கத்தி, கரண்டி, பாசி போன்ற பொருட்களைக் கொடு, இல்லாவிட்டால் உன்னைக் கொன்ற விடுவோம் என மிரட்டினார்களை. சால்மர் சற்றும் பயப்படாமல் என்னை வேண்டுமானாலும் கொன்று சாப்பிடு, ஆனால் என்னிடமிருந்து ஒரு சிறு பொருளையும் பயமுறுத்தி வாங்க முடியாது என தீர்க்கமாக கூறி விட்டார். மறுநாள் அந்தக்கூட்டத்தைச் சேர்ந்த தலைவன் வந்து அவரிடம் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டான். உடனே அவனுக்கு சில பரிசுப் பொருட்களை கொடுத்தார்.

சால்மரின் மனைவி ஜேன் அவருக்கு இணையாக ஊழியத்தில் மனிதர்களையே சாப்பிடும் கொடூர மக்கள் மத்தியில் அச்சமின்றி பணியாற்றினார்கள். ஒருநாள் இறந்து போன தனது கணவன் உடலையே விருந்தாக சமைத்து ஒருகூட்ட மக்களுக்கு பரிமாறினாள் ஒரு பெண். இப்படிப்பட்ட மக்கள் கிறிஸ்துவை அறிந்து வளர்ந்தனர்

சால்மரின் கடின உழைப்பால் 1878–ல் மனிதர்களை சாப்பிட்ட மக்கள் 1882–ல் மனந்திரும்பி, ஒருவரையொருவர் ஏற்று, ஐக்கியமாக அன்பாக வாழக் கற்றனர். நரமாமிசம் இல்லை, மனித மண்டை ஓடு, தாடை எலும்பு அணிகலன்களாக அணிவதில்லை. சண்டையிட்டு கொன்று தின்னும்

இம்மக்கள் கிறிஸ்துவில் புது வாழ்வு பெற்றனர். 1901–ம் ஆண்டு ஏப்ரல் 4–ம் தேதி "கோரிபாரி" என்ற தீவிற்கு பயணமாகி ஏபல்ல 7–ம் தேதி ஈஸ்டர் மாலை அன்று அந்த தீவை அடைந்தார். சால்மர் உடன் ஊழியர் டாம் கின்ஸ் இருவரும் கோரிபாரி தீவில் இறங்கியதும் அவர்களை ஒரு பெரிய விருந்துச் சாலைக்கு அந்த பழங்குடி மக்கள் அழைத்துச் சென்றனர். தீடிரென மிஷனெரிகள் பின்புறம் இருந்து உருட்டுக் கட்டைகளால் தாக்கப்பட்டு, கீழே தள்ளப்பட்டு, தலைகள் துண்டிக்கப்பட்டன. அவர்கள் உடல்களை பெண்கள் சமைத்து அங்கிருந்த பெருங்கூட்ட பழங்குடியினருக்கு விருந்தாகப் படைத்தனர்.

ஜேம்ஸ் சால்மர் ஒருநாளும் பயங்கரமான இந்த பழங்குடியினருக்கு பயப்பட்டதில்லை காரணம் அவருக்கு மரண பயமில்லை. மனிதனையே உண்ணும் இந்த மக்களுக்காக தன்னையே பலியாக்கியமையால், இன்று சாட்சிமிக்க திரள்கூட்ட நரமாமிச பட்சினிகள் தேவனுடைய பிள்ளைகளாக, தலைமுறை தலைமுறைகளாக வாழ்கின்றனர்.

வாழ்க்கை முறையில் அறிவிக்க வேண்டியது
அந்தஸ்தை அல்ல, கிறிஸ்துவை...

## வாலிபர் பகுதி

## சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பெரியவர்கள் சொல்வார்கள் பொறுத்தவன் பூமி ஆள்வான் என்று ஆம், சகோதர சகோதரிகளே பொறுமை என்பது மிகவும் முக்கியமானது, அதுவும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டு வாழ்கிற கிறிஸ்தவனின் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதது பொறுமை. எல்லாம் வேகமாக கிடைக்க வேண்டும், வேகமாக வாழ வேண்டும் என்று instant- ஆக வாழ்கிற ஆடம்பரமான நாகரீகமான வாழ்க்கையில் பரலோகம் என்ற நிச்சயத்தை வேகம் என்று சொல்லி பொறுமையிழந்து மறந்து விடுகிறவர்களாக காணப்படுகிறோம்.

நாம் வேதாகமத்தில் கூட தேவனுடைய வாக்குதத்தத்தை பெற்றுக்கொண்ட சாராள் பொறுமையிழந்ததின் காரணமாக இஸ்மவேல் என்ற சந்ததி உருவானது. இது போன்று நாமும் பொறுமையிழந்ததின்

காரணமாக பாவத்திற்கு வழி வகுத்து நமது தலைமுறைக்கு சாபமாக மாற்றி வைத்திருக்கலாம் (மத்-5:5). மலைப் பிரசங்கத்தில் இயேசு சொல்கிறார், சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான், அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று. பொறுமை சாந்த குணத்தை தருகிறது அவர்களை பாக்கியவான்கள் என்று இயேசு கூறுகிறார்.

மேலும் 1-பேது-2:20-ல் நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு. நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரிதியாயிருக்கும். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, அநேக நேரங்களில் நான் சரியாகத் தானே செய்தேன் என்று பொறுமையையிழந்து கோபம் படுகிறோமா? ஒன்று சிந்தித்து பாருங்கள் கிறிஸ்து பாவம் செய்யவில்லை, நமக்கு நன்மை தானே செய்தார். நமக்காக தானே இவ்வுலகிற்கு மானிடராய் வந்தார். ஆனால் அவர் சிலுவையிலறையப்பட்டாரே, அவமானப்படுத்தபட்டாரே, இன்று அவரை எத்தனை முறை வேதனைப் படுத்தி கொண்டிருக்கிறோம், ஆனால் அவர் இன்றும் நம்மீது நம் குடும்பத்தின் மீதும் பொறுமை உள்ளவராய் இருக்கிறாரே -யாக்-1:19.

ஆகையால் என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்கு

தாமதமாயும் இருக்கக்கடவர்கள். இதில் பேசுகிறதற்கு பொறுமையாயிருக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். யாக்-3:6-ல் நாவும் நெருப்புதான் அது அநீதி நிறைந்த உலகத்தில் நம்முடைய சரீரத்தை கறைபடுத்தி ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடுகிறதாயும் பார்க்கிறோம். அன்பானவர்களே, நாம் பேசும் வார்த்தைகள் மனிதர்களிடத்தில் அன்பை பிரதிபலிக்க, உறவை நிலைபடுத்துவதாகவும் இருக்க வேண்டும். ஆகவே பேசுகிற வார்த்தைகளை பொறுமையாகவும் அவைகள் அக்கறையுள்ளதாயும் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்கு பிரியமான சகோதர, சகோதரிகளே, உபத்திரவத்தில் மேன்மை பாராட்டாமலும் பொறுமையைப் பெற்று கொள்ள அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்கிறவர்களாகவும் வாழ்ந்து இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வோம்.

வாலிபம் இயேசுவுக்கே..

# Kids Corner





# Psalm 23

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | S | E | N | S | U | O | E | T | H | G | I | R |
| H | T | R | O | F | M | O | C | L | N | S | A | P |
| A | W | E | L | O | R | D | B | L | S | E | R | S |
| D | U | M | N | L | P | L | T | E | F | E | E | R |
| O | Y | E | U | E | E | A | N | I | P | M | S | E |
| W | E | O | A | A | M | D | T | A | Y | T | T | T |
| D | S | L | D | W | O | I | R | H | A | J | O | A |
| N | E | E | B | O | O | E | E | F | S | Y | R | W |
| M | T | A | G | A | S | O | F | S | K | C | E | Z |
| H | N | Y | T | T | T | L | I | V | E | R | T | H |
| F | A | D | Q | H | D | R | E | H | P | E | H | S |
| L | W | S | E | R | U | T | S | A | P | M | U | A |

| | | |
|---|---|---|
| COMFORT | LORD | SHADOW |
| DEATH | MERCY | SHEPHERD |
| ENEMIES | PASTURES | SOUL |
| EVIL | PATHS | STAFF |
| FEAR | PREPAREST | TABLE |
| GOODNESS | RESTORETH | WANT |
| LEADETH | RIGHTEOUSNESS | WATERS |

EDITHANDEDWARDLARA




Joshua Johnson

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook – ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

photos5.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only